இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 04-08-2024

# இவர்கள் எல்லாம் என்ன ஜாதி?

**அனுராக் தாக்கூர் பேசியது அதிர்ச்சி அளிக்கவில்லை. மோடியின் சிஷ்யர் அப்படிப் பேசாமல் இருந்தால்தான் அதிர்ச்சிக்குரியதாக இருக்கும். சோனியா காந்தியை 'ஜெர்சி பசு' என்றும், ராகுலை 'கலப்பினக் கன்று' என்றும் ஒரு காலத்தில் கிண்டல் அடித்தவர்தான் பிரதமர் மோடி என்பதை நாடு மறந்திருக்காது. அவரது வாரிசு தான் நான் என்பதை அனுராக் தாக்கூர் நிரூபிக்கிறார்.**

இழந்துபோன அமைச்சர் பதவியை மீட்டெடுக்கவும் இத்தகைய குரூர தந்திரத்தை அனுராக் பயன்படுத்தி இருக்கலாம். எதுவாக இருந்தாலும் நாடாளுமன்றத்துக்கு மாபெரும் களங்கம் இது.

**கடந்த ஜூலை 30 ஆம் தேதி நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசிய அனுராக் தாக்கூர், 'ராகுலை ஜாதி தெரியாதவர்' என்ற பொருளில் சொல்லி இருக்கிறார். இவர் தான் ஐந்தாண்டு காலம் அமைச்சராக இருந்தவராம். கேவலம். அதைவிட மோசமானது என்ன என்றால், இந்த உரையை சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பிரதமர் மோடி, "மிகச் சிறந்த உரை" என்று பட்டயம் கொடுத்துள்ளார். தன்னால் சொல்ல முடியாததை அவர் சொல்லி விட்டார் என்ற மகிழ்ச்சியா இது? மக்கள் கொடுத்த தோல்வி இவர்களை எந்தளவுக்கு நிலை குலைய வைத்துள்ளது என்பதன் அடையாளம் இது.**

அனுராக் தாக்கூரின் உரையை பிரதமர் வெளியிட்டதைக் குறிப்பிட்டு, அவருக்கு எதிராக உரிமைமீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறது காங்கிரஸ். காங்கிரஸ் எம்.பி.யான சரண்ஜித் சிங் சன்னி, சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் நோட்டீஸ் கொடுத்துள்ளார். "மக்களவை நடைமுறைகள், அலுவல் நடத்தை விதி எண் 222 இன் கீழ் இது தவறானது ஆகும். அனுராக் தாக்கூரின் கருத்துகள் அவைத் தலைவரால் நீக்கப்பட்டன. ஆனால் முழுக் காணொலியையும் எக்ஸ் வலைத்தளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டுள்ளார். அந்தக் காணொலியில் அவைத்தலைவரால் நீக்கப்பட்ட கருத்துகளும் இடம்பெற்றுள்ளன. பிரதமரின் இந்தச் செயல் அதிர்ச்சி அளிக்கிறது. அவையில் நீக்கப்பட்ட கருத்துகளை வெளியிடுவது உரிமைமீறல் ஆகும். அவைக்கு அவமதிப்பாகும்" என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தை அவமதிப்பதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க.வுக்கு எந்தக் கவலையும் இல்லை. இப்படி எடுப்பதாக இருந்தால் தொடர்ச்சியாக உரிமை மீறலைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியது தான்.

இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால், "அனுராக் தாக்கூர் பேசியதில் என்ன தவறு?" என்று சட்ட அமைச்சர் கிரண் ரிஜிஜூ கேட்டிருப்பதுதான். "ராகுல் காந்தியின் ஜாதியைக் கேட்பதில் என்ன தவறு?" என்று கேட்கிறார் அவர். அனுராக் தாக்கூர், ராகுல் காந்தியின் ஜாதி என்ன என்று கேட்கவில்லை. 'ராகுல்காந்தி ஜாதி தெரியாதவர்' என்ற பொருளில் சொல்லி இருக்கிறார். 'என்ன ஜாதி' என்று கேட்பது வேறு, 'உனக்கு உன் ஜாதியே தெரியாது' என்று சொல்வது வேறு.

நாடாளுமன்றத்தில், ராகுல் காந்தியைப் பார்த்து இக்கேள்வியைக் கேட்ட அனுராக் தாக்கூர், யாராவது ஒரு தனி மனிதரிடம் ரோட்டில் கேட்கச் சொல்லுங்கள். அப்போதுதான் அவர் கேட்ட கேள்வியின் உண்மையான பொருளை உணரமுடியும். அது ஒரு இழிவுபடுத்தும் பொருளைக் கொண்டது என்பதை அப்போதுதான் உணர முடியும்.

**ஜாதியைப் பெருமையாகவும், பெருமிதமாகவும், கர்வமாகவும், ஆணவமாகவும் நினைக்கும் ஒருவரால்தான் இது போன்ற கேள்வியைக் கேட்க முடியும். "ஜாதியற்றவராக வாழ்வதுதான் பெருமையே தவிர, ஜாதி கேட்பது பெருமையல்ல" என்று நாடாளுமன்றத்தில் உணர்த்தி இருக்கிறார் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி. இதெல்லாம் ஜாதி ஜடங்களுக்கு எங்கே புரியப் போகிறது?**

**பெரியார் சொன்னார், "ஜாதியைக் கூட ஒழித்துவிடலாம், ஜாதிப் பெருமையை ஒழிக்க முடியாது" என்று. ஜாதியைப் பெருமையாக நினைத்துக் கொண்டிருப்பவர்களை, அதை நாடாளுமன்றத்திலேயே காட்டிக் கொள்பவர்களை, எந்தப் பட்டியலில் சேர்ப்பது? இப்படி எல்லாம் பேசுபவர்கள் என்ன குரூரமான ஜாதி வகை?**

இந்திய அரசியலமைப்புச் சட்ட அவையில் அண்ணல் அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரை மிகமிக முக்கியமானது. "1950 ஜனவரி 26 ஆம் நாள் நாம் முரண்பாடுகள் நிறைந்த வாழ்க்கைக்குள் நுழைய இருக்கிறோம். அரசியலில் நாம் சமத்துவத்தைப் பெற்றிருப்போம். சமூகப் பொருளாதார வாழ்வில் ஏற்றத்தாழ்வைப் பெற்றிருப்போம். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்குக்கும் ஒவ்வொருமதிப்புஎன்றிருக்கும். நமதுசமூகபொருளாதாரவாழ்விலோ 'ஒரு மனிதன் ஒரு மதிப்பு' என்ற கோட்பாட்டை தொடர்ந்து நிராகரிப்பவர்களாக இருப்போம். எவ்வளவு காலத்துக்கு இந்த முரண்பட்ட வாழ்வை வாழப் போகிறோம்?" என்று கேட்டார் அண்ணல்.

சமூக, பொருளாதாரத்தில் மட்டுமல்ல; அரசியலிலும் 'ஒரு மனிதன் ஒரு மதிப்பு' கோட்பாடு இன்னமும் வரவில்லை, வர விடமாட்டார்கள் என்பதையே அனுராக் தாக்கூர் போன்றவர்களின் பேச்சும், அதை வழிமொழியும் பிரதமர் மோடியின் செயலும் காட்டுகின்றன.

"இந்த அவை தமக்கு அளிக்கப்பட்டுள்ள இறையாண்மை மிக்க அதிகாரத்தை அறிவார்ந்த முறையில் பயன்படுத்தும் என்பதை நாம் நமது நடத்தையின் மூலம் நிரூபிப்போம்" என்றார் அண்ணல் அம்பேத்கர். "ம்கூம்! அப்படி ஆக விடமாட்டோம்" என்பதை அனுராக் தாக்கூர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரால் - இந்தியாவின் 3வது பெரிய மேம்பாலமாகக் கட்டப்பட்ட

# அண்ணா மேம்பாலத்தின் பொன்விழா - ரூ.10.85 கோடியில் புதுப்பிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக.4-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்தியாவின் மூன்றாவது பெரிய மேம்பாலமாக சென்னையில் 1973இல் கட்டிய அண்ணா மேம்பாலத்தின் பொன்விழாவை முன்னிட்டு ரூ.10.85 கோடியில் புதுப்பிக்கப்பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகுபடுத்தப்பட்டுள்ள சென்னை அண்ணா மேம்பாலம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.8.2024) சென்னையில், 1973ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அண்ணா மேம்பாலத்தின் பொன்விழாவை யொட்டி, 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகுபடுத்தப்பட்டுள்ள அண்ணா மேம்பாலத்தை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் முதல் சாலை மேம்பாலமான அண்ணா மேம்பாலம் உட்பட சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகப் பல மேம்பாலங்களைக் கட்டிய பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையே சாரும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் திட்டமிட்டு வடிவமைத்துக் கட்டப்பட்ட மிகப் பெரிய மேம்பாலம் அண்ணா மேம்பாலம். 1970 ஆம் ஆண்டு அப்போதைய சென்னை மாநகரில் ஜெமினி ஸ்டுடியோ அமைந்திருந்த அந்தப் பகுதியில் நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலை, இராதாகிருஷ்ணன் சாலை, தேனாம்பேட்டை சாலை, ஜி.என். செட்டி சாலை ஆகிய சாலைகள் சந்திக்கும் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வந்தது. அந்த நெரிசலை நீக்கி அப்பகுதியில் தடையில்லாத சாலைப் போக்குவரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1.7.1973 அன்று திறந்து வைக்கப்பட்டது.

பொதுவாக ஆறுகள், தாழ்வான பகுதிகள், இரயில் தண்டவாளங்கள் போன்ற பகுதிகளைக் கடப்பதற்குத்தான் மேம்பாலங்கள் கட்டப்படுவது வழக்கமாகும். ஆனால், சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை மட்டுமே கருத்தில் கொண்டு சென்னை மாநகரில் சாலை சந்திப்பில் முதன் முதலாகக் கட்டப்பட்ட மேம்பாலம் இது. ஜெமினி ஸ்டுடியோ அப்பகுதியில் அமைந்திருந்ததையொட்டி அப்பாலத்தைக் குறிப்பிடும் போது, "ஜெமினி மேம்பாலம்" என்று முதலில் அப்பாலம் கூறப்பட்டது. ஆயினும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களைப் போற்றும் தம் நெறிகளில் ஒன்றாக அன்றைய நிலையில் இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய மேம்பாலமாகத் தாம் கட்டிய இந்தப் பாலத்திற்கு "அண்ணா மேம்பாலம்" எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள்.

சென்னை மாநகருக்கு வெளியூர்களில் இருந்து வருகை தருவோரும், சென்னை மாநகர மக்களும் இந்தப் பாலத்தைக் கடந்து செல்லும் போது வாகன நெரிசல்கள் இன்றி, விரைவாக செல்வதை இன்றும் நாம் காண முடிகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அண்ணா மேம்பாலம் கட்டப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்து பொன்விழா காணும் நிலையில் அதனைப் புதுப்பித்திட தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 8.85 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். மேலும், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 2 கோடி பெறப்பட்டது. மொத்தம் 10 கோடியே 85 இலட்சம் ரூபாய்ச் செலவில் சென்னை அண்ணா மேம்பாலம் புதுப்பிக்கப் பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகுபடுத்தப்பட்டுள்ளது.

இதில் பாலத்தின் தூண்கள் GRC பேனல்கள் கொண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளன. பாலத்தின் கீழ் அழகூட்டும் வகையில் பசுமையான செடிகள் ஒளிரும் மின்விளக்குகள், மக்கள் நடந்து செல்ல ஏதுவாக நடைபாதை, செயற்கை நீரூற்று ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.


மேலும், திராவிட கட்டடக் கலையைப் பறை சாற்றும் வகையில் பாலத்தின் முகப்பில் உள்ள தூண்கள், பூங்கா பகுதியில் யாழி சிற்பங்கள், முக்கோண ஸ்தூபிகள், பித்தளைப் பலகையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

பொன்விழா ஆண்டை முன்னிட்டு புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டுள்ள அண்ணா மேம்பாலத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, நேற்று (03.08.2024) சேலம் மாவட்டம், சங்ககிரியில் உள்ள நினைவுத் தூண் அமைவிடத்தில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தமிழ்நாடு அரசின் சார்பில் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் வளையம் வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, எம்.பி.க்கள் டி.எம்.செல்வகணபதி, வி.எஸ்.மாதேஸ்வரன் மற்றும் மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (02.08.24) ஈரோடு மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ. 7.57 கோடி மதிப்பில் புதிய செயற்கை இழை ஓடுதளத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுங்கரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரைத் தமிழ் இசைச் சங்கம் சார்பில் -

# கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு 'முத்தமிழ்ப் பேரறிஞர்' பட்டம்!

## மதுரையில் அமைச்சர் தங்கம் தென்னரசு - ஏ.சி.முத்தையா பங்கேற்பு!

**மதுரை, ஆக.4-**

**மதுரைத் தமிழ் இசைச் சங்கம் 50 ஆண்டுகள் கடந்து இந்த ஆண்டு பொன்விழா கொண்டாடுகிறது. அந்த விழாவில் கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு 'முத்தமிழ்ப் பேரறிஞர்' என்ற பட்டம் வழங்கப் படுகிறது.**

இந்தப் பட்டமானது 1லட்சம் ரூபாய் பொற்கிழி, பதக்கம் மற்றும் பட்டயம் கொண்டது. ஆகஸ்ட் 5ஆம் தேதி மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறும் விழாவில், அமைச்சர் தங்கம் தென்னரசு, மதுரைத் தமிழ் இசைச் சங்கத் தலைவர் ஏ.சி.முத்தையா, தேவகி முத்தையா உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

கர்நாடக இசைப் பாடகியும் சமயச் சொற்பொழிவாளருமான விசாகா ஹரி பொற்கிழி பெறுகிறார்.



கவிஞர் வைரமுத்து வாழ்க்கைக் குறிப்பு:

பழைய மதுரை மாவட்டமாய் விளங்கிய இன்றைய தேனி மாவட்டத்தில் வைகை அணையை ஒட்டியுள்ள மெட்டூரில் 1953ஆம் ஆண்டு கவிஞர் வைரமுத்து பிறந்தார். தந்தை ராமசாமித் தேவர்; தாயார் அங்கம்மாள்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பை வடுகபட்டியில் முடித்த வைரமுத்து சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ படித்துத் தங்கப் பதக்கம் பெற்றார். இவர் எழுதிய 'வைகறை மேகங்கள்' என்ற கவிதை நூல் இவர் கல்லூரியில் படிக்கும் போதே ஒரு மகளிர் கல்லூரிக்குப் பாடமாக விளங்கியது. கல்லூரிப் படிப்பை முடித்த கவிஞர் வைரமுத்து தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையத்தில் மொழிபெயர்ப்பாளராகச் சிறிதுகாலம் பணியாற்றினார்.

1980ஆம் ஆண்டு பாரதிராஜாவின் நிழல்கள் படத்தில் 'பொன்மாலைப் பொழுது' என்ற பாடலின் மூலம் பாடலாசிரியராக அறிமுகமானார். இதுவரை 8000 பாடல்கள் எழுதியுள்ள கவிஞர் வைரமுத்து, இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்காக 7முறை தேசிய விருது பெற்றிருக்கிறார்.

திரைப்பாடல், இலக்கியம் என்று இரண்டு துறைகளிலும் சிகரம்தொட்ட வைரமுத்து தனது 'கள்ளிக் காட்டு இதிகாசம்' நூலுக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றிருக்கிறார். அது 22 இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உயர்ந்த விருதுகளான பத்மஸ்ரீ மற்றும் பத்மபூஷண் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம் இவரைக் 'காப்பியக் கவிஞர்' என்று கொண்டாடினார். அந்நாள் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இவரைக் 'கவிசாம்ராட்' என்று பாராட்டியிருக்கிறார். தமிழ்நாட்டின் அந்நாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இவருக்குக் 'கவிப்பேரரசு' என்று பட்டம் தந்திருக்கிறார்.

உலகின் 5 கண்டங்களிலும் தமிழ் இலக்கியப் பயணம் செய்தவர். அண்மையில் இவர் எழுதிய 'மகா கவிதை' என்னும் பெருங்கவிதை நூலுக்கு மலேசியன் இந்தியக் காங்கிரஸ் மற்றும் தமிழ்ப்பேராயம் இணைந்து ஒரு லட்சம் ரிங்கிட் (இந்திய மதிப்பில் 17லட்சம்) பரிசு வழங்கின.

இதுவரை 39 நூல்கள் எழுதியிருக்கும் கவிப்பேரரசு வைரமுத்து மூன்று பல்கலைக் கழகங்களின் கௌரவ டாக்டர் பட்டம் பெற்றவராவார். இவரது படைப்புகளை ஆராய்ச்சி செய்து 40க்கும் மேற்பட்டவர்கள் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். இப்போது தமிழ் இசைச் சங்கம் முத்தமிழ்ப் பேரறிஞர் பட்டத்தை வழங்கி உள்ளது.